9

# சத்தியத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை

*இரண்டு யோவான் நிருபமானது, புதிய ஏற்பாட்டில் ஒரு அதிகாரம் மாத்திரம் கொண்ட புத்தகங்களில் ஒன்றாக இருக்கிறது. அது கொண்டுள்ள வசனங்களின் எண்ணிக்கையின்படி, முழுவேதாகமத்திலேயே மிகவும் சிறிய புத்தகமாக இருக்கிறது.[1] 3 யோவான் 14 வசனங்களையும், பிலேமோனும் யூதாவும் ஒவ்வொன்றும் 25 வசனங்களையும் கொண்டிருக்கும்போது, இது 13 வசனங்களை மாத்திரமே கொண்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஒபதியா, 21 வசனங்களைக் கொண்ட ஒரு அதிகாரத்தை மாத்திரம் கொண்டுள்ளது. 2 யோவான் ஒரு சிறிய புத்தகமாக இருக்கிறது, ஆனால் அது பெரிய செய்தியைக் கொண்டிருக்கிறது. அந்த செய்தியானது சத்தியத்தைக் குறித்ததாக இருக்கிறது.*

*அமெரிக்காவின் சட்டமன்றங்களில் சாட்சியளிப்பவர்கள், சத்தியத்தைச் சொல்லவும், சத்தியம் முழுவதையும் சொல்லவும் மற்றும் சத்தியத்தை மாத்திரம் சொல்லும்படி சத்தியம்பண்ணக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சபைகளும் பிரசங்கியார்களும்கூட, சத்தியத்தைச் சொல்லவும், சத்தியம் முழுவதையும் சொல்லவும் மற்றும் சத்தியத்தை மாத்திரமே சொல்லவும் தீர்மானிக்க வேண்டும். இந்த உலகமானது சத்தியத்தைக் குறித்த பிரச்சனையைக் கொண்டிருக்கிறது - அந்தப் பிரச்சனைக்கு 2 யோவானின் செய்தியானது தீர்வைக் கொண்டிருக்கிறது.*

## *பிரச்சனை: சத்தியத்தை குறித்து அக்கரையின்றி இருத்தல்*

*கிறிஸ்தவத்தில் சத்தியத்தின் முக்கியத்துவத்தை குறைத்து கூறுவது இன்றைய சுபாவமாக இருக்கிறது.*

### *மற்றவர்கள் மத்தியில்*

*முன்பு நமது வித்தியாசங்களை குறித்து சமய அயலகத்தாரோடு விவாதிப்பது சாத்தியமானதாக இருந்தது; இன்று அதற்கு எதிராக, பல்வேறு சமயக் குழுவின் அங்கத்தினர்கள் சிறிதளவே அறிந்தவர்களாகவும் மற்றும் உபதேசத்தை குறித்த கேள்விகளைப்பற்றி சிறிதளவே அக்கறையுடையவர்களாயும் இருக்கிறார்கள்.[2] அவர்கள் சத்தியத்தைப் பற்றி எப்போதாவது சிந்திப்பார்களானால், அவர்களுடைய கண்ணோட்டம், "ஒவ்வொருவரும் தங்கள் சொந்த சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் உங்கள் சத்தியத்தை உடையவராக இருக்கிறீர்கள், நான் எனது சத்தியத்தை உடையவனாக இருக்கிறேன், மற்றும்*

*மற்றவர்கள் அவர்கள் சத்தியத்தை உடையவர்களாக இருக்கிறார்கள், நீங்கள் உங்கள் சத்தியத்தில் திருப்தியடையுங்கள் என்பதுதான் முக்கியமான ஒரே காரியமாயிருக்கிறது" என்பதாக இருக்கிறது. மேற்கத்திய உலகத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் முழுமையான சத்தியம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை மறுக்கிறார்கள். (நீங்கள் எதைக்குறித்தும் நிச்சயம் உள்ளவர்களாக இருக்கமுடியாது என்பதில் தான் அந்த மக்கள் நிச்சயம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்!)*

***சபையில்***

*சபையில் கூட உபதேசத்தை மற்றும் சத்தியத்தின் முக்கியத்துவத்தை குறைத்து கூறும் நிலை இருந்து கொண்டிருந்தது. முழுமையான, முடிவான சத்தியம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அங்கீகரிப்பதற்கு சபை அங்கத்தினர்கள் கூட விருப்பம் அற்றவராக இருக்கிறார்கள். கர்த்தருடைய சபையின் ஊழியக்காரர்களுக்கு, "வேதாகமத்தை பின்பற்றாமல் இருப்பதற்காக மக்களை குறைகூற வேண்டாம், அவர்கள் தங்கள் சொந்த சத்தியத்தை பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். நமது உபதேசம், நமது சத்தியம் நமக்கு நல்லதாயிருக்கிறது; அவர்கள் சத்தியம் அவர்களுக்கு நல்லதாயிருக்கிறது." என்ற அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.*

***பிரசங்கியார்கள் மத்தியிலும் கூட***

*இந்த வகை சூழலில், பல பிரசங்கியார்கள் "முழுமையான சத்தியத்தை" பிரசங்கிக்க மனமின்றி இருக்கிறார்கள், ஒருவரும் இடறலடையாதபடி வேதாகம உபதேசத்தை அவர்கள் மென்மையாக போதிக்க விரும்புகிறார்கள். தவறுகளோடு ஒத்துப்போகும் இந்த பிரசங்கியார்கள், ஒருவர் எவ்விதம் இரட்சிக்கப்பட முடியும் என்பது தொடர்பாக வேதாகம வசனங்களுக்கு பின்வருவது போன்ற தங்கள் சொந்த வார்த்தைகள் அல்லது விளக்கங்களை உடையவர்களாக இருக்கக்கூடும்:*

> *யோவான் 8:24ஆ - இயேசு சொன்னது, "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்."*
>
> *அவர்கள் சொல்வது: "இயேசுவை குறித்த சரியான இறையியல் கொள்கைகளை - அதாவது அவர் இருக்கிறார், தேவன் மாம்சத்தில் வந்ததாக உரிமை கோருகிறபடி - என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் - நீங்கள் மரிப்பீர்கள் மற்றும் உங்கள் தவறான செயல்களால் - அல்லது குறைந்த பட்சம் இயேசு இதைத்தான் சொல்வது போல இருக்கிறது."*
>
> *லூக்கா 13:3 - இயேசு சொன்னது, "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்."*
>
> *அவர்கள் சொல்வது: "மனந்திரும்ப மறுக்கிற ஒரு மனிதன் மறுமையில் பின்விளைவுகளையுடைய ஒரு பேராபத்தில் இருப்பது போன்று தோன்றும் - இருப்பினும், இது சில சூழ்நிலைகளுக்கு பொருந்தாமல் போகலாம்."*
>
> *மாற்கு 16:16 - இயேசு சொன்னது, "விசுவாசமுள்ளவனாகி*

ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.”

அவர்கள் கூறுவது: “ஓரளவு விசுவாசித்து, அவன் விரும்பினால் ஞானஸ்நானம் பெறுகிறவன், இரட்சிக்கப்படுவான், அல்லது குறைந்த பட்சம் அதிக மோசமானவனாக மாறாமல் இருப்பான். விசுவாசியாதவனோ, உருவகமாக சொல்லவேண்டுமானால் - விசுவாசியாமல் இருப்பதற்கு ஒரு நல்ல காரணத்தை உடையவனாக இராத நிலையில் குற்றப்படுத்தப்படுவான்.”

இந்த பிரசங்கியார்கள் அன்பு, கிருபை, கிறிஸ்தவ சிந்தை மற்றும் நற்கிரியைகளை செய்தல் ஆகியவைகளை பற்றி வலியுறுத்தி - போதிக்கலாம். இருந்த போதிலும், அவர்கள் சத்தியத்தை பிரசங்கிப்பது மற்றும் போதிப்பது மற்றும் கள்ள உபதேசங்களை நிராகரிப்பதின் அவசியத்தை மறந்து விடக்கூடாது - வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டிய, முழுமையான சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டிய, மற்றும் சத்தியத்தை மட்டும் பிரசங்கிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது!

## தீர்வு: 2 யோவானின் செய்தி

இரண்டு யோவான் சத்தியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அந்த அப்போஸ்தலர், இவ்வாறு எழுதினார்.

மூன்று வார்த்தைகள் இந்த புத்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. (1) “சத்தியம்” என்ற வார்த்தை முதல் நான்கு வசனங்களில் ஐந்து முறை காணப்படுகிறது. (2) “கற்பனை(கள்)” என்ற வார்த்தை வசனங்கள் 4 முதல் 6வரையுள்ள பகுதியில் நான்குமுறை காணப்படுகிறது. (3) “போதனை” (“உபதேசம்”; KJV) என்ற வார்த்தை வசனங்கள் 9 மற்றும் 10இல் மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிருபத்தில், “சத்தியம்,” “கற்பனை,” அல்லது “உபதேசம்” என்ற கருத்து பன்னிரண்டு முறை வந்துள்ளதை காண்கிறோம். இந்த மூன்று வார்த்தைகளுமே துல்லியமான உபதேசத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இந்த புத்தகம் கிறிஸ்தவ வாழ்வின் இலக்கு தொடர்பாக மூன்று அறைகூவல்களை முன்வைக்கிறது.

## சத்தியத்தில் நடப்பதற்கான ஒரு அறைகூவல்

வாழ்த்துரை பகுதியின்படி இந்த கடிதம் ஒரு “மூப்பரால்” எழுதப்பட்டது. இது அநேகமாக அப்போஸ்தலர் யோவானை குறிப்பிடுவதாக இருக்கிறது. அவர் தமது வயது மற்றும் அதிகாரத்தை வலியுறுத்துவதற்காக இவ்விதமாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இந்த கடிதம், “தெரிந்து கொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும்” எழுதப்பட்டது (2 யோவான் 1). இது ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவ ஸ்திரீ மற்றும் அவளுடைய பிள்ளைகளை குறிக்கக்கூடுமானாலும், இந்த “தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள்” என்பது ஒரு சபையையும் மற்றும் “அவளுடைய பிள்ளைகள்” என்பது அந்த சபையின் அங்கத்தினர்களையுமே அதிகமாக குறிப்பிட்டதாக தோன்றுகிறது.[3] அந்த “தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள்” என்பது ஒரு தனிநபராக அல்லது ஒரு சபையாக, எப்படி இருந்திருந்தாலும்,

இந்த நிருபத்தின் உபதேசம் அப்படியே நிலைத்திருக்கிறது. இந்த நிருபத்தை பெற்றவர்கள் சத்தியத்தோடு கொண்டிருந்த உறவே மிகவும் முக்கியமானதாக இருந்தது.

யோவான் அவர்களை குறித்தும் மற்றும் சத்தியத்தை குறித்தும் என்ன சொன்னார் என்பதை கவனியுங்கள்: (1) யோவான் "சத்தியத்தினிமித்தம் சத்தியத்தில்" அவர்களை நேசித்தார் (வசனம் 1). (2) சத்தியத்தை அறிந்திருந்த மற்றவரும் அவர்களை நேசித்தனர் (வசனம் 1). (3) யோவான் பிதாவினிடத்திலிருந்தும் மற்றும் குமாரரிடத்திலிருந்தும் "சத்தியத்தோடும் அன்போடும்" வாழ்த்துக்களை அனுப்பினார் (வசனம் 3). (4) தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளின் பிள்ளைகளில் சிலர் "சத்தியத்தில் நடக்கிறதை" கண்டு யோவான் சந்தோஷப்பட்டார் (வசனம் 4),[4] சிலர் அப்படி நடக்கவில்லை என்பதையும் இந்த வாக்கியம் உணர்த்துகிறது.

"சத்தியத்தில் நடத்தல்" என்றால் என்ன? இயேசு தம்மை "சத்தியம்" என்று குறிப்பிட்டு பேசினார் (யோவான் 14:6), ஆனால் இங்கே "சத்தியம்" என்பது இயேசுவினிடத்திலிருந்தும் மற்றும் அவர் அனுப்பின ஆவியானவரால் ஏவப்பட்ட மனிதரிடத்திலிருந்தும் வந்த உபதேசத்தை குறிக்கவேண்டும். அவருடைய சீஷர்களை குறித்து இயேசுவானவர் தம் பிதாவிடம், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என ஜெபித்தார் (யோவான் 17:17). ஆகவே, "சத்தியத்தில் நடத்தல்" என்பது தேவனுடைய வசனத்தை பின்பற்றுவதாக உள்ளது. "சத்தியத்தில் நடத்தல்" என்பது சத்தியத்தை அறிந்திருப்பது அல்லது தேவனுடைய வசனத்தை வெறுமெனே அறிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமானதாக இருக்கிறது; அது அதின்படி வாழ்வதாக, அதற்கு கீழ்ப்படிவதாக மற்றும் அதின்படி ஆராதிப்பதாக இருக்கிறது.

சத்தியத்தில் நடத்தல் என்பது முக்கியமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம். நீங்கள் எதை நம்புகிறீர்கள் மற்றும் எது உங்கள் இலக்காக இருக்கிறது? உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? சபையிலுள்ள உங்கள் சகோதர சகோதரர்களுக்கான உங்கள் விருப்பம் என்ன? அது நீங்களும் மற்றும் அவர்களும் "சத்தியத்தில் நடப்பதாக" இருக்கக்கூடாதா? நம்முடைய இலக்கு சத்தியத்தில் நடப்பதாக இருக்கவேண்டும். நாம் "சத்தியத்தில் நடந்து கொண்டிருந்தால்," மற்றும் நமது சக கிறிஸ்தவர்களும் "சத்தியத்தில் நடந்து கொண்டிருந்தால்" பின்னர் நாம் யோவானைப் போல "மிகவும் சந்தோஷப்படுவதற்கான" காரணத்தை உடையவர்களாக இருப்போம் (2 யோவான் 4).

## கற்பனைகளை கைக்கொள்வதற்கான ஒரு அறைகூவல்

தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாளின் பிள்ளைகளில் சிலர் "சத்தியத்தில் நடப்பதை" குறித்த தனது சந்தோஷத்தை யோவான் தெரிவித்த பின்னர், அவர் யாருக்கு எழுதிக் கொண்டிருந்தாரோ அவர்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்கிறார்:

*இப்போழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் (2 யோவான் 5).*

யோவான் ஒருவரிலொருவர் அன்புகூரும்படியான கற்பனையை கைக்கொள்ளும்படி தன் வாசகர்களை வேண்டிக்கொண்டார். இது ஒரு புதிய கட்டளையாக இருக்கவில்லை, ஏனெனில் இயேசு தாமே இதை கொடுத்திருந்தார் (யோவான் 13:34, 35). இந்த சகோதரர்களுக்கு அதின் முக்கியத்துவம் அவர்கள் முதன் முதலில் கிறிஸ்தவர்களான காலத்திலிருந்தே போதிக்கப்பட்டிருந்தது.

யோவான் நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கு ஒருவிதமான வட்ட சுழற்சி தத்துவத்தை பயன்படுத்துகிறார்:

*நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதி முதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பனை இதுவே (2 யோவான் 6).*

நாம் யோவானிடம், "அன்பு என்றால் என்ன?" என கேட்போமானால், "கற்பனைகளை கைக்கொள்வது" என அவர் பதிலளிப்பார். பின்னர் நாம் அவரிடம், அந்த "கற்பனை என்ன?" என கேட்போமானால், "ஒருவரில் ஒருவர் அன்பாயிருத்தல்" என அவர் கூறுவார். யோவானுடைய வட்ட சுழற்சி விவாதம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டியதின் முழுமையான முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது,

ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பது தொடர்பாக யோவான் கூறியதை அநேகர் அநேகமாக பாராட்டுவார்கள். சிலர் ஒருவரில் ஒருவர் அன்புகூருவது ஒன்றுமட்டும் போதுமா என சிந்திக்கிறார்கள். ஆரோக்கியமான உபதேசத்தை போதிப்பதை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை; ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கிற வரையிலும் மற்றவர்கள் என்ன போதிக்கிறார்கள் அல்லது எதை விசுவாசிக்கிறார்கள் என்பது அவர்களுக்கு வித்தியாசத்தை ஏற்படுத்துவதில்லை. நிச்சயமாக, ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல் முக்கியமானதுதான், ஆனால் அன்புகூரவேண்டும் என்ற கட்டளை ஒன்றுமட்டும் தான் முக்கியமானதாயிருக்கிறதா?

வசனம் 6 ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும் என்பதோடு, வேறு முக்கியமான கற்பனைகளும் உள்ளன என்ற ஆலோசனையை முன்வைக்கிறது, ஏனெனில் "நாம் அவருடைய *கற்பனைகளின்படி* நடப்பதே" என பன்மையில் கூறுகிறது. (வலியுறுத்தல் என்னுடையது). "ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்பது ஒரே ஒரு கற்பனையாக இருக்கிறது, நாம் கீழ்ப்படிய வேண்டிய பிற கட்டளைகளும் இருக்கவேண்டும். அடுத்த வசனம் "வஞ்சகர்கள்" மற்றும் "அந்திக் கிறிஸ்துவை" பற்றி பேசுகிறது.[5] சிலர் கள்ளப் போதகர்களாக இருந்தார்கள், கிறிஸ்தவர்கள் அவர்களைப் பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற கட்டளை மட்டும் கிறிஸ்தவத்திற்கான விதியாக இருப்பதில்லை, உண்மையில், ஆரோக்கியமான உபதேசத்தின் முக்கியத்துவமானது, ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதுடன் தொடர்பு உடையதாக இருக்கிறது: கள்ள உபதேசத்தை போதிப்பது அல்லது கள்ளப்போதகர்களை ஏற்றுக் கொள்வது என்பது மற்றவர்களுடைய

ஆத்துமாக்களை நித்திய ஆபத்தில் வைக்கக் கூடியதாக, மற்றவர்களை நேசிப்பதில் குறைபடுவதைக் காட்டுவதாகும்.

ஆகவே, ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கை இலக்கு தொடர்பாக நாம் முன்னர் குறிப்பிட்டவைகளோடு இன்னும் கொஞ்சம் கூட்டவேண்டியுள்ளது: ஒரு கிறிஸ்தவரின் இலக்கு *கற்பனைகளைக் கைக்கொண்டு* சத்தியத்தில் நடப்பதாக இருக்கவேண்டும்.[6]

என்ன கற்பனைகள்? நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்ற கற்பனைக்கு கீழ்ப்படியவேண்டும். அதோடு, இன்று நமக்கு பொருந்துகிற தேவனுடைய எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். நாம் வாழ்க்கையில் பல குறிக்கோள்களை உடையவர்களாக இருக்கக் கூடுமானாலும், தேவனுடைய சித்தத்தை செய்யும்படி, அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதே நமது முதல் குறிக்கோளாக இருக்கவேண்டும்!

## கிறிஸ்துவின் போதனையில் அல்லது உபதேசத்தில் நிலைத்திருப்பதற்கான ஒரு அறைகூவல்

> *மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான் (2 யோவான் 7).*

ஏன் யோவான் இந்த சகோதரர்களை கற்பனைகளை கைக்கொள்ளும்படி துரிதப்படுத்தினார்? ஏனெனில், ''அநேக வஞ்சகர்'' ''உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்'' (2 யோவான் 7அ). அவர்கள் என்ன போதித்துக் கொண்டிருந்தார்கள்? இயேசுவானவர் மாம்சத்தில் வரவில்லை என போதித்துக்கொண்டிருந்தார்கள் (2 யோவான் 7ஆ).[7]

மேலும், யோவான் அவர்கள் இந்த வஞ்சகர்கள் அல்லது கள்ளப் போதகர்களை குறித்து ஜாக்கிரதையாயிருக்க தவறினால், அவர்கள் எதற்காக பாடுபட்டார்களோ, அதின் பலனை இழக்க நேரிடும் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார் (2 யோவான் 8). இந்த கிறிஸ்தவர்கள் கர்த்தரை உண்மையாய் சேவித்திருந்தார்கள்; அவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருந்திருந்தார்கள். இப்போது அவர்கள் கள்ளப் போதகர்களால் விசுவாசத்திலிருந்து விலகும்படி நடத்தப்படுவார்களானால், அவர்கள் தங்கள் விசுவாசத்திற்கான பலனை இழந்துவிடுவார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வோமானால், அவர்கள் இழந்து போகப்பட்டவர்களாய் இருப்பார்கள். அவர்கள் தாங்கள் வஞ்சிக்கப்படுவதை எப்படி தவிர்க்க முடியும்? கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் இருப்பது எவ்வளவு ஆபத்தான பிரச்சனை என்பதை புரிந்து கொள்வதின் மூலம், அதை தவிர்க்க முடியும். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை இரண்டு உண்மைகள் உணர்த்துகின்றன.

### தேவனோடு நமக்குள்ள உறவை நாம் பாதுகாக்க வேண்டும் (2 யோவான் 9)

முதலாவதாக, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பது என்பது

தேவனோடு நமக்குள்ள உறவை பாதிப்பதாக இருப்பதால் அது முக்கியமானதாக இருக்கிறது. யோவான், "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும்[8] தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன்" என்றார் (2 யோவான் 9).[9] "கிறிஸ்துவின் உபதேசத்தில்" நிலைத்திருப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, அதில் நிலைத்திராதவன் தேவனை உடையவன் அல்ல - அதாவது, அவன் தேவனோடு ஐக்கியம் உள்ளவன் அல்ல.

நாம் நிலைத்திருக்க வேண்டிய இந்த "கிறிஸ்துவின் உபதேசம்" என்னவாக இருக்கிறது? சிலர் இது கிறிஸ்துவைப்பற்றிய சரியான நம்பிக்கைகளை முழுமையாக உள்ளடக்கியிருக்கிறது என நினைக்கிறார்கள்: அவர் தேவனுடைய குமாரனாக - மாம்சத்தில் வந்த தேவனாக இருக்கிறார், மாம்சத்தில் வந்த வார்த்தையானவர், ஒரே நேரத்தில் தேவனாகவும் மனிதனாகவும் இருந்தவர்.[10] இருப்பினும், "கிறிஸ்துவின் உபதேசம்" என்பது கிறிஸ்துவைப்பற்றிய உண்மைகளை உள்ளடக்கியதாக இருந்தாலும், அது கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்த எல்லா உபதேசத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நிச்சயமாக, யோவான் கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்த சகல சத்தியத்தையும், அவருடைய சீஷர்களால் ஆரம்பகால சபை மக்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த சகல சத்தியத்தையும் குறித்து பொருள்படும்படி பேசினார்.[11] வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், "கிறிஸ்துவின் உபதேசம்" என்பது கிறிஸ்தவ சமயத்திற்கான, புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற எல்லா அவசியமானவைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் அந்த உபதேசத்தில் நிலைத்திராவிட்டால், நாம் பிதாவோடு நமக்கு உள்ள ஐக்கியத்தை இழந்துவிடுகிறவர்களாக இருப்போம்.

**நாம் கள்ளப் போதகர்களை ஆதரிக்கக் கூடாது**

இரண்டாவதாக, "கிறிஸ்துவின் உபதேசத்தில்" நிலைத்திருப்பது என்பது, நாம் கள்ளப் போதகர்களை ஆதரிக்கக் கூடாது என்ற விஷயத்தில் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. யோவான் இவ்வாறு எழுதினார்,

> ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான் (2 யோவான் 10, 11).

*அன்றைய உபதேசம்.* யோவானுடைய வாசகர்கள் எவ்விதமாக இந்த உபதேசத்தை தங்களுக்கு பொருத்திபார்த்திருப்பார்கள்? ஆரம்பகால சபையில், சுவிசேஷகர்கள் களப்பணிக்காக பிராந்திய சபைகளால் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் அப்போஸ்தலருடைய செய்தியை எடுத்துக் கொண்டு ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு பயணம் செய்தனர். அவர்கள் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சென்ற போது, தங்களை ஏற்றுக் கொண்டு, உபசரித்து, அடுத்த இடத்திற்கு செல்வதற்கு தேவையான பணம் மற்றும் பொருட்களை கொடுத்து உதவிய சகோதரரோடு தங்கியிருந்தார்கள். தனது மூன்றாம் நிருபத்தில், யோவான் இந்த பயணம் செய்யும் சுவிசேஷகர்களை ஆதரிக்கும்படி உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு

அறிவுரை கூறினார். இந்த ஊழியர்களை ஆதரிப்பதினால், சகோதரர்கள் அவர்களோடு உடன் ஊழியக்காரராக மாறினார்கள் என யோவான் கூறினார் (3 யோவான் 8).

இருப்பினும், ஆரோக்கியமான உபதேசத்தை கொண்டுவந்த இந்த கிறிஸ்துவின் செய்தியாளர்களுடன், கள்ளப்போதகர்களும் சகோதரரை சுற்றி பயணம் செய்து வந்தனர், அவர்கள் தங்களை கள்ளப்போதகர்கள் என அறிமுகம் செய்துகொள்ளவில்லை; அவர்கள் அநேகமாக தங்களை கள்ளப்போதகர்கள் என நினைக்கவில்லை. இருந்தபோதிலும், அவர்கள் கள்ளப்போதகர்களாக அல்லது "வஞ்சகர்களாக" இருந்தார்கள்; இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்திருந்ததை அவர்கள் மறுதலித்தார்கள் (2 யோவான் 7). சத்தியத்தை போதித்தவர்கள் செய்தது போல, இந்த கள்ளப்போதகர்களும் கிறிஸ்தவர்கள் மற்றும் சபையார் ஆகியோர் தங்களுக்கு உதவும்படி தேடினார்கள்.

யோவானுடைய செய்தி, உண்மையில், "அப்படிப்பட்ட ஒரு நபரை உபசரிக்கவேண்டாம்! அவர்கள் உங்கள் வீட்டில் தங்கும்படி அனுமதிக்க வேண்டாம்!" என்பதாக இருந்தது. நாம் ஒரு கள்ளப்போதகனுக்கு "வாழ்த்துதல் சொல்லக்கூடாது"[12] - அதாவது நாம் அவனுடைய கள்ளப்போதனையை அங்கீகரிக்கும்படியான அல்லது ஆதரிக்கும்படியான எதையும் செய்யக்கூடாது. யோவான் இந்த கடிதத்தை ஒரு சபைக்கு எழுதியிருந்தால், செய்தியானது இந்த அறிவுரையையும் வழங்குகிறது; அப்படிப்பட்ட மனிதர்கள் போதகர்களாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது அல்லது சபையால் ஆதரிக்கப்படக் கூடாது.

ஏன் அப்படிச் செய்யக் கூடாது? ஏனெனில், அப்படிப்பட்டவனுக்கு உதவி செய்கிறவன் "அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 11). ஆத்துமாக்கள் இழந்துபோவதற்கு கள்ளப் போதகர்கள் காரணமாக இருக்கிறார்கள்; நாம் அவனுடைய வேலையில் அவனுக்கு உதவி செய்தால், இழந்துபோன அந்த ஆத்துமாக்களுக்கு நாமும் பொருப்பாளிகளாகிறோம்! நியாயத்தீர்ப்பு நாளில் யாரேனும் ஒருவர் நம்மை பார்த்து, "நீங்கள் ஒரு கள்ளப் போதகனை ஆதரித்ததால் நான் இழந்து போனேன்! நான் அவனை நம்பினேன் மற்றும் என் ஆத்துமாவை இழந்து விட்டேன்"! என சொல்லக் கேட்டால், அது நமக்கு எவ்வளவு பெரிய துக்கமாக இருக்கும்!

*இன்றைய உபதேசம்.* இந்த போதனையை இன்று நாம் எப்படி பொருத்திபார்க்க வேண்டும்? நிச்சயமாக, இந்த அறிவுரை, கள்ளப் போதனையை போதிக்கிறவனாக நாம் அறிந்த ஒருவனை சந்தித்தால், "hello" என்று சொல் வதை மறுப்பதில்லை. தவறை போதிக்கிற ஒருவனுக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுத்து, உதவுவதை இது தடை செய்வதில்லை. சிறப்பாக, இது தவறான போதனையை போதிக்கிற ஒருவனுக்கு, "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு போதிக்கும்படி" நாம் அவனை சந்திப்பதிலிருந்து நம்மை தடுப்பதில்லை (நடபடிகள் 18:26).

யோவானுடைய போதனை, சத்தியத்தை போதிக்கிறவர்கள் மாத்திரம் ஒரு பிராந்திய சபையில் பிரசங்கம் செய்ய மற்றும் போதிக்க அனுமதிக்கப்படுவதை நாம் உறுதி செய்யும்படி நம்மை கோருகிறது. நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் இந்த உபதேசத்தை நமது இருதயங்களில் பதித்துக்கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட முறையில், நான் தவறான போதனையை பரப்புகிறவர்களுக்கு உதவிசெய்ய எதிர்பார்ப்பதில்லை, யாரேனும் ஒருவர் நாமகரணக் கூட்ட கருத்துக்கள் மற்றும் எழுத்துக்களை பரப்பிக் கொண்டு எனது வாசலுக்கு வரும் போது, நான் அவர்களிடம் பேசுவேன். அவன் தாகமாயிருந்தால், நான் அவனுக்கு குடிப்பதற்கு ஏதாவது கொடுப்பேன். நான் அவனை மனமாற்ற முடியும் என்று கருதுவேனானால், நான் அவனுக்கு போதிக்க முயற்சி செய்வதற்காக அவனை அழைப்பேன். எப்படியிருந்தாலும், அவன் தன் வேலையை நிறைவேற்ற நான் எதையும் செய்ய மறுப்பேன். உதாரணமாக, நான் கள்ளப்போதகன் என்று நினைக்கிற ஒரு மனிதனிடம் இருந்து, அவனுடைய அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை எடுத்துக்கொள்வேன், ஆனால் நான் அந்த புத்தகத்திற்கு பணம் கொடுக்க மாட்டேன் அல்லது அவனுடைய வேலைக்காக நன்கொடை எதுவும் கொடுக்கமாட்டேன். இவ்விதமாக, ஒவ்வொரு கிறிஸ்தவரும் தவறான உபதேசம் போதிக்கப்படுவதற்கு உதவாமல் இருக்க தீர்மானம் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

**நாம் தீர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்**

வசனங்கள் 10 மற்றும் 11 இல் உள்ள யோவானுடைய வார்த்தைகள் கிறிஸ்தவ வாழ்வுக்கு எதிரான மிகப்பெரிய அச்சுறுத்துதல்களுக்கு: கள்ளப் போதனையின் அபாயத்திற்கு - எதிரான தீர்வுகளை உடையவைகளாக இருக்கின்றன. கள்ளப்போதனை என்பது ஒரு நிஜமான ஆபத்தாக இருக்கிறது, மற்றும் புதிய ஏற்பாடு அதற்கெதிராக நம்மை காத்துக் கொள்ளும்படி உறுதியாக எச்சரிக்கிறது.[13] தீர்வு இரண்டு வகையாக இருக்கிறது: (1) நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்போமாக, மற்றும் (2) கள்ளப் போதனையை பரப்புகிறவர்களுக்கு நாம் ஆதரவு தராமல் இருப்பதை அல்லது நாம் அவர்களை ஊக்கப்படுத்தாதிருப்பதை உறுதி செய்து கொள்வோமாக. <u>கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நமது குறிக்கோள் கிறிஸ்துவினுடைய உபதேசங்களை கைக்கொள்வதாலும் மற்றும் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பதாலும் சத்தியத்தில் நடப்பதாக இருக்க வேண்டும்.</u>

## முடிவுரை

சத்தியத்தை அறிவிப்பது மட்டும் கிறிஸ்தவத்தின் முக்கியமான ஒரு பகுதி அல்ல. நாம் போதிக்கிறபடி வாழ்வது, கிறிஸ்தவ குணாதிசயங்களை உருவாக்கிக் கொள்வது; ஜெபம், வேத வாசிப்பு மற்றும் ஆராதனையின் மூலம் அன்றாடமும் தேவனோடு நெருங்கி வாழ்வதை தேடுவது மற்றும் நமது அயலகத்தாரை நேசிப்பது மற்றும் நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் உதவி செய்வது போன்றவைகளை செய்வதும் முக்கியமானதாக இருக்கிறது (கலாத்தியர் 6:10) தேவனுடைய வார்த்தை போதிப்பதின்படி செய்யாமல், வெறுமெனே அதை அறிந்திருப்பது அல்லது விசுவாசிப்பது ஆகியவற்றிற்கு எதிராக வேதாகமம் நிறைய எச்சரிக்கைகளை கொண்டுள்ளது.[14] மேலும் அது மத சடங்குகளை செய்கிறவர்கள் மற்றும் தேவனை ஆராதிக்கிற அதே வேளையில் மக்களை தரக்குறைவாக நடத்துகிறவர்களையும் கண்டிக்கிறது.[15]

சத்தியத்தை போதிப்பது ஒன்று மட்டும் முக்கியமானதாக இல்லாமல் இருந்தாலும், அது மிகவும் முக்கியமானதாக <u>இருக்கிறது!</u>

உபதேசத்துக்கடுத்தவைகளை போதிக்கிற இடத்தில் கிருபை மற்றும் அன்பு ஆகியவற்றை போதிப்பதை மாற்றி அமைக்கலாம் என்ற கொள்கையை முன்வைப்பவர்கள் சத்தியத்தில் தவறான பிரிவினையை ஏற்படுத்துகிற குற்றம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை போதிப்பது மற்றும் கிறிஸ்தவ வாழ்வு குறித்து போதிப்பது ஆகியவற்றிக்கு இடையில் நாம் ஒரு தெரிவை செய்யவேண்டும், ஒன்றேல் இதை அல்லது அதை செய்யவேண்டும், ஆனால் இரண்டையும் செய்யக்கூடாது என்று கூறுவது போல் உள்ளது. கிறிஸ்தவர்கள் "ஒன்றேல் இது அல்லது அது" என்ற சூழ்நிலையால் சந்திக்கப்படுகிறவர்கள் அல்ல; நாம் இரண்டையும் செய்யமுடியும்! நாம் உபதேசத்துக்கடுத்த காரியங்களை போதிக்கலாம் *மற்றும்* போதிக்கவேண்டும் மற்றும் கிறிஸ்தவர்கள் அன்பும் பரிசுத்தமும் உள்ள வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும் போதிக்க வேண்டும்! நாம் நமது பிரசங்க முறையை அமைப்பதற்கு உதவும்படி யோவானை அனுமதிப்போமாக: அவர், "கிருபையும், இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங்கூட, உங்களோடிருப்பதாக" என்று வாழ்த்தினார் (2 யோவான் 3). சத்தியம் *மற்றும்* அன்பு ஆகிய இவ்விரண்டும் முக்கியமானவைகள்! ரிச்சர்ட் பெக்டோல் என்பவர் இவ்வாறு எழுதினார்,

> சில நேரங்களில் பிரதான நோக்கத்திலிருந்து வெளியே போய்விடுவது சாத்தியமானதுதான். உபதேசத்தை சத்தியத்தை அதிகமாக வலியுறுத்திக் கொண்டு, அன்புக்குரிய முக்கியத்துவத்தை அதற்கு கொடாமல் நாம் கடுமை யானவர்களாக, இணக்கம் இல்லாதவர்களாக மற்றும் சண்டைக்காரராக, கர்த்தர் இடமிருந்து மக்களை வெளியே துரத்தி விடுகிறவர்களாக இருப்பதும் சாத்தியமானதுதான், ஆனால் அதே சமயத்தில், நாம் அன்பு, மன்னிப்பு மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் தொடர்பாக ஒரு சிந்தையை ஏற்படுத்திக் கொண்டு, எது சத்தியமோ அதற்காக நாம் நிற்காமல் போகக்கூடும். நாம் இரண்டு இறுதி நிலைகளையும் தவிர்க்கவேண்டும் மற்றும் சத்தியத்தை அன்புடன் கைக்கொள்ள வேண்டும்.[16]

சத்தியத்தை பிரசங்கிப்பதும் போதிப்பதும் நமக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது? நமது நவீன சட்டமுறையில், யாரேனும் ஒருவர், "உண்மையை, முழுமையான உண்மையை மற்றும் உண்மையை மட்டும்" கூறத்தவறினால், அவர் மிகக் கடுமையான குற்றமாகிய பொய் சாட்சி சொன்னவராக, பொய் சத்தியம் செய்தவராக தண்டிக்கப்படக்கூடும். நாம் மதரீதியான பொய்சாட்சிக்காரராக பொய் சத்தியம் செய்யும் குற்றத்தை உடையவராக இல்லை என்பதை நிச்சயம் செய்துகொள்வோம்; நாம் "சத்தி யத்தை மட்டுமே" போதிக்கிறவர்களாக இருப்போமாக.

---

குறிப்புகள்

[1]கிரேக்க பதிப்பில், 3 யோவான் தான் புதிய ஏற்பாட்டின் மிகக் குறுகிய புத்தகமாக, 2 யோவானை விட ஒரு வரி குறைவானதாக இருக்கிறது. (Henry Clarence Thiessen, *Introduction to the New Testament* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1943], 313.) [2]இங்கே "உபதேசம்" என்ற வார்த்தையானது சபை, இரட்சிப்பின் திட்டம் மற்றும் ஆராதனை போன்ற பாடங்களை போதிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

*புதிய ஏற்பாட்டில் "உபதேசம்" என்பது சாதாரணமாக "போதனையை" குறிக்கிறது, அது இந்த பாடங்களை குறிப்பிட்டாலும் சரி அல்லது கிறிஸ்தவ வாழ்க்கை, திருமணம், குடும்பம் அல்லது வேறு எந்த பாடங்களையும் குறிப்பிடக்கூடும்.* [3]*"தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள்" என்பது ஒரு தனிநபரைத்தான் குறிப்பிட்டது என நம்பினவர்களில்* Guy N. Woods *என்பவரும் உள்ளார், A Commentary on the New Testament Epistles of Peter, John, and Jude* (Nashville: Gospel Advocate Co., 1983), 338-39. *இது ஒரு பிராந்திய சபையை குறிப்பிட்டது என நம்பினவர்களில் இவர்களை உள்ளடக்குகிறது* Thomas F. Johnson, *1, 2, and 3 John,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 147, and J. W. Roberts, *The Letters of John,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1968), 150. *மேலும் "தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள்" ஒரு சபையாக இருந்திருக்குமானால், இறுதி வாழ்த்துக்கள் (வசனம் 13) இன்னொரு சபையில் இருந்து வந்துள்ளன.* [4]*3 யோவான் 3 இல், காயு "சத்தியத்தில் நடப்பதாக" சொல்லப்பட்டதை ஒப்பிடுங்கள்.* [5]*"அந்திக்கிறிஸ்து" என்பது "கிறிஸ்துவுக்கு எதிரானவன்" என்று பொருள்படும். புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை ஐந்து முறை காணப்படுகிறது, மேலும் யோவானுடைய நிருபங்களில் மாத்திரமே காணப்படுகின்றன (1 யோவான் 2:18* [*இருமுறை, ஒருமுறை ஒருமையில்*]*, 22; 4:3; 2 யோவான் 7). அது "கிறிஸ்துவை எதிர்ப்பவன், எதிராளி அல்லது எதிரி என பொருள்படுகிறது"* (Noel Merideth, "False Teachers and How to Deal with Them," *Denton Lectures* [1987], 267). [6]*"கற்பனைகளை கைக்கொள்ளுதலின்" அல்லது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலின் முக்கியத்துவம் மத்தேயு 7:21; யோவான் 14:15, 21; 15:10; 1 யோவான் 2:4, 5; 3:22. ஆகிய வசனப்பகுதிகளிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.* [7]*இந்த கள்ளப் போதனை 1 யோவான் 2:18-22 விலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அநேகமாக, உடலும் பொருளும் தீமையானது என போதிக்கிற ஒரு கொள்கையின் ஆரம்பகால பிரதிபலிப்பாக இருந்தது, இந்த சிந்தனையின்படி, தேவனானவர் மாம்ச வடிவில் உண்மையில் வாழ்ந்திருக்க முடியாது. இந்த கொள்கையின் ஒரு கருத்து, கிறிஸ்து மாம்சத்தில் இருந்தது போல தோன்றினார் அல்லது காணப்பட்டார் ஆனால் உண்மையில் அவர் தசை மற்றும் எலும்புகளை உடையவராக இருக்கவில்லை.* [8]KJV *பதிப்பிலுள்ள "மீறி நடக்கிற" என்பது தாழ்ந்த கிரேக்க வசனப்பகுதியில் காணப்படும் இன்னொரு வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.* NIV *"முந்தி ஓடுகிறவன்" என்றுள்ளது.* NRSV *"கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல், அதை தாண்டி போகிற எவனும்" என மொழிபெயர்த்துள்ளது.* NAB *"கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராத அளவுக்கு முன்னோக்கி செல்பவன்" என கூறுகிறது.* [9]*"இங்கே விவாதிக்கப்படும் பாவமானது ஒருவர் கிறிஸ்துவின் உபதேசத்தை தாண்டிச் செல்வதாக இருக்கிறது; அவர் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பதில்லை"* (Merideth, 270). [10]*"உங்களிடத்தில் வருகிறவர்கள் இந்த உபதேசத்தை, அதாவது, ... இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மாம்சத்தில் வந்தார்" என்பதை கொண்டு வருகிறார்களா அல்லது இல்லையா என்பதே பரிசோதனையாக இருக்கிறது* (Johnson, 158; *வலியுறுத்தல் நீக்கப்பட்டுள்ளது*).

[11]*ஒரு விளக்கவுரையாளர், "உபதேசம்* [*'போதனை';* NASB] *கிறிஸ்துவினுடையது"* (KJV) *என்பது "கிறிஸ்து கொண்டுவந்த உபதேசம் மற்றும் அவர் முதலில் தானே கொண்டுவந்தது, மற்றும் அதன் பிறகு அவருடைய பின்பற்றாளர்களால் கொண்டுவரப்பட்டது என எழுதினார்* [*எபிரெயர் 2:3*] *... புதிய ஏற்பாட்டின் பயன்பாடு இதற்கு ஏகமாக ஆதரவாக இருக்கிறது"* (Brooke Foss Westcott, *The Epistles of St. John* [London: William Clowes and Sons, 1883; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.,

1966], 230). J. W. Roberts *என்பவர் "பெரும்பாலான விளக்கவுரையாளர்கள்," "கிறிஸ்துவின் உபதேசம்" என்பது, "கிறிஸ்து போதித்த போதனையை" அர்த்தப்படுத்துகிறது என நம்புகிறார்கள் என சொன்னார். ஆனால், அது "கிறிஸ்துவை பற்றிய உபதேசத்தை" குறிக்கக்கூடும் என்பதை ஒத்துக் கொண்டார்* (Roberts, 163-64). [12]*"அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன்" (வசனம் 10) என்று* NASB *இல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள்* KJV *இல் "வாழ்த்துதல் சொல்லுகிறவன்" என்றும் மற்றும்* NIV *யில் "வரவேற்பு கொடுப்பவன்" என்றும் வந்துள்ளது. ஜான்சன் என்பவர், இது வாழ்த்துக் கூறுவதை விட அதிகமானதை உணர்த்துகிறது; அது சமூகத்தை பிரித்தவர்களுடன் ஒத்துழைப்பது மற்றும் அவர்களுடைய ஊழியத்தில் உதவி செய்வதையும் உள்ளடக்கி இருக்கிறது என கூறினார்* (Johnson, 159). [13]*உதாரணத்திற்கு, காணவும், மத்தேயு 7:15; 24:24; நடபடிகள் 20:29, 30; 1 தீமோத்தேயு 4:1, 2; 2 தீமோத்தேயு 4:1-4; 2 பேதுரு 2:1; 1 யோவான் 2:18; 4:1; யூதா 4.* [14]*காணவும் மத்தேயு 7:21-27; யாக்கோபு 1:22-25; 2:14-17.* [15]*காணவும் ஏசாயா 1:10-17; மீகா 6:6-8; மத்தேயு 23:14, 23- 28.* [16]Richard Pectol, "Love in the Truth," *The Preacher's Periodical* 6 (November 1985): 14.